omi

# அஞ்சலி
சஞ்சிகை

# ANJALI
MAGAZINE

தீபம் 1
சுடர் 3

கார்த்திகை - மார்கழி - 2007




PUBLIC LIBRARY
JAFFNA

*Peace to those on whom God's favour rests.*

உள சமூக ஆன்மீக இலக்கிய சஞ்சிகை

# அஞ்சலி

உள, சமூக, ஆன்மீக, இலக்கிய சஞ்சிகை

| உள்ளே............ | தீபம் - 1<br>சுடர் - 3 விலை – 30/= |
|---|---|


ஆசிரியர் எழுதுகிறார்
குறளுக்கோர் உரை
உள்ளத்தனையது உயர்வு
விஞ்ஞானமும் மனித வாழ்க்கையும்
அமைதியின் ஒளிக்கீற்று
சின்ன யேசுவே என்னில் வாரும்
மதங்கள் காட்டும் மனிதம்
நேசிப்போம்
Good manners
பொது அறிவு
வாழ்க அஞ்சலி
ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்
ஆங்கிலம் படிப்போம்
சமாதானமும் சுபீட்சமும்
வாசகரின் உள்ளத்திலிருந்து
தவமாய் தவமிருந்து
"ஓ" மானிடனே........!
How to use a Dictionary
மனமாற்றம்



ஆசிரியர்.
அருட்தந்தை
எஸ். டேமியன் omi(MA)
ஆலோசகர்
அருட்தந்தை ப. விமல்

கணினி வடிவமைப்பு
ஜெஸ்வின் & பருத்தித்துறைப்
பங்கு கணினிப் பயிற்சியகம்,
பங்குப் பணிமனை,
புனித தோமையார் ஆலயம்.
பருத்தித்துறை.

பதிப்பகம்.
New.S.P.M – V.M றோட் P.PD.


நாளைய தலைவர்கள் நாங்களே


Address
The Editor,
Anjali Aham
Nellandai, Thumpallai,
Point Pedro
Jaffna – Srilanka.

E.Mail:
anjaliyouth @yahoo.com



அஞ்சலியில் இடம் பெறும் அனைத்து ஆக்கங்களுக்கும் கருத்துக்களுக்கும் அதனை எழுதியவர்களே பொறுப்புடையவர்கள் பிரசுரத்திற்கு ஏற்றுக் கொள்ளும் ஆக்கங்களை திருத்தியமைக்க ஆசிரியருக்கு உரிமையுண்டு.

PUBLIC LIBRARY
JAFFNA

# ஆசிரியர் எழுதுகிறார்.......

இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு கிறிஸ்து பிறந்ததினத்தை கொண்டாட உலகம் முழுவதும் விழா எடுத்துக்கொண்டிருக்கிறது. இவ்வழாவை பல விதமாக கொண்டாடுகிறார்கள். எவ்வாறாயினும் இந்த விழாவானது எமக்கு கொடுக்கும் செய்தி என்ன? மனிதன் உள்ளத்திலே அவர் பிறக்கும் போதுதான் அந்தப்பிறப்பின் பொருள் முழுமையடைகின்றது. நிறைவு பெறுகின்றது. மனிதமனங்களிலே இறைவன் பிறக்க வேண்டும் என்றால் மனிதன் தன் உள்ளத்திலே உள்ள பகைமை, வெறுப்பு, ஆணவம், அகங்காரம், பொறாமை போன்றனவற்றிலே இருந்து விடுபடும் போது அங்கே இறைவன் குடில் கொள்கிறான். பிறக்கிறான். மனித உருவம் எடுத்து இறைவன், மனிதனை அன்பு செய்ய, அரவணைக்க, ஆறுதல் கூற, நம்பிக்கை யூட்ட எமக்காக பிறந்தார். மனிதனும் அதற்குப்பதிலாக அந்த அன்பை, மற்றவர்களுக்கு கொடுக்கும் போது அங்கே அவர் பிறக்கின்றார். மன்னிப்பை கொடுக்கும் போதும், பிறரின் துன்பங்களில் பங்கெடுக்கும் போதும், பிறரின் நோவுகளில் துன்பங்களில் பங்கெடுக் கும் போதும் அங்கே அவர் பிறக்கிறார், இல்லாமையிலே வறுமையிலே அவர்களோடு இருக்கும் போது அங்கே இறைவன் மீண்டும் பிறக்கிறார்.

எனவே மனிதத்தை நேசிப்போம். மனிதத்தை வளர்ப்போம். அமைதியை நிலை நாட்ட நம்மை அர்ப்பணிப்போம். இருளிலே வாழும் மக்களுக்கு ஒளியாக இருப்போம்.

எமது அன்பு வாசகர்கள் அனைவருக்கும் இனிய நத்தார்- புது வருட வாழ்த்துக்கள்.

"உலகில் அவருக்கு உகந்தோருக்கு அமைதி உண்டாகட்டும்."



ஆசிரியர்,
அருட்தந்தை எஸ்.டேமியன் அ.ம.தி
இயக்குநர்,
அஞ்சலியகம்.

# குறளுக்கு ஓர் உரை



திரு.ஆ.வடிவேலு,
செயலாளர்,
அகில இலங்கை வள்ளுவர் கோட்டம்,
தும்பளை, பருத்தித்துறை.

திருவள்ளுவர் உலகக் கவிகளுள் தலை சிறந்த கவி. அவர் ஆக்கிய கவியாம் திருக்குறள் உலகுள்ளளவும் அழியாப் பெருமை வாய்ந்தது. அதன்கண் அமைந்த நுட்பமும், திட்பமும், மாண்பும் சொல்லுந்தரமன்று இவற்றால் ஈர்க்கப்பட்ட ஞானிகளும், முனிவர்களும், புலவர்களும், அறிஞர்களும், மேதைகளும், பண்டிதர்களும், வித்துவான்களும் என எண்ணிலடங்காதோரெல்லாம் குறளுக்கு உரை யெழுதினர். இவர்களுள் முதலில் உரைதந்த தருமர், மணக்குடவர், தாமத்தர், நச்சி, பருதி, பரிமேலழகர், திருமலையர், மல்லர், பரிப்பெரு மாள், காலிங்கர் எனும் பத்துப் பேருடைய உரைகளுள் பரிமேலழகரின் உரையே சிறப்புடையதென்பதை

"...................................நூலில்
பரித்தவுரை யெல்லாம் பரிமே லழகர்
தெரித்தவுரை யாமோ தெளி"

என்ற பாடல் வரிகளின் மூலம் உணர்த்தப்பட்டுள்ளது. இதன் பின் விளக்கவுரைகள் என்ற வகையில் சோமேசமுதுமொழிவெண்பா, குமரேசமுதுமொழிவெண்பா, தினகரன்வெண்பா, திருமலை வெண்பா, இரங்கேசர் வெண்பா, குமரேசவெண்பா, என்று திருக்குறளை இறுதி இருஅடிகளாக கொண்ட வெண்பாக்களுக்கு இதிகாச புராண இலக்கியக்கதைகளால் விளக்கி உரை தரப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து இன்றுவரை ஆய்வுரை, சிறப்புரை, பதவுரை, விளக்கவுரை, தெளிவுரை, புத்துரை, பொருளுரை, கருத்துரை, புதியஉரை, மக்களுரை என எத்தனையோ உரைகள் வெளிவந்துள்ளன. எத்தனை உரைகள் வெளிவந்த போதிலும் இன்னுந்தான் பல குறள்களின் உரைகள் மயக்கமாகவும், தெளிவற்றதாகவும் இருக்கிறது என்பத வெள்ளிடைமலை.

திருவள்ளுவரே உரையும் எழுதியிருந்தால் இந்த வீபரீதத்திற்கு இடமே இருந்திருக்காது. ஆனால் திருக்குறள் தோன்றிய காலம் சங்கம்மருவிய செய்யுள் இலக்கிய காலம். அக்காலத்தில் தோன்றிய

PUBLIC LIBRARY
JAFFNA

அனைத்து இலக்கியங்களும் செய்யுள் வடிவிலேயே அமைந்திருந்தன அந்த இலக்கியங்கள் எல்லாம் செவிவழியாக குருகுலக்கல்வியின் மூலம் குறிப்பிடக் கூடியவர்களிடத்திலே அடைக்கலம் பெற்றதாக அமைந்தது. ஆயினும் அவ்வாறு நெட்டுருப்போட்டு மனனம் செய் தவர்கள் யாரும் மனநோயாளர்களாக மாறிய வரலாறும் இருக்கவில்லை. இறையடி சேரும்வரை இவ்வுலகத்திலே எல்லோர்க்கும் ஏற்புடைய கருத்துக்களை எடுத்துக்கூறி இருக்கின்றனர்.

இன்று உரைநடை இலக்கிய காலம். உரைக்கே உரை எழுதவேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது. செய்யுளைப்பற்றி யாரும் கவலைப்படுவதில்லை. அதனால் மரபுக்கவிதை மறைந்து கொண்டு போகும் சூழ்நிலை காணப்படுகிறது. திருக்குறள் மரபுக்கவிதை வழியிலே வந்த ஒன்று. மனனம் செய்வதற்கு ஏற்ற எதுகை, மோனை, சந்தம் என்பன நிறைவாக காணப்படுவது. இதனை மனனம் செய்து எப்பொழுதும் சிந்திப்பவர் வள்ளுவர் எண்ணிய கருத்துக்களையும் இலகுவில் கண்டு கொள்வர்.

செய்ந்நன்றி அறிதல் என்ற அதிகாரத்தில் முதலாவதாக அமைந்துள்ள

“செய்யாமற் செய்த உதவிக்கு வையகமும்
வானகமும் ஆற்றல் அரிது”

என்ற குறளுக்கு தனக்கு முன்பு ஓர் உதவி செய்யாது இருக்க ஒருவன் செய்த உதவிக்கு மண்ணுலகும் விண்ணுலகும் கைமாறாக கொடுத்தாலும் ஒத்தலரிது என்று பரிமேலழகர் உரை கண்டுள்ளார். மணகுடவர், பரிதியார், காலிங்கர் போன்றவர்களும் பெரும் பாலும் இதேகருத்தையே விளக்கியுள்ளனர். இவர்களைத் தொடர்ந்து உரைகண்ட அனைவரும் பரிமேலழகர் உரையைத் தழுவியே உரை எழுதியுள்ளனர். இதனால் எவருடைய உரைகளும் வள்ளுவரின் உள்ளக்கருத்தை உணர்த்துவதாக அமையவில்லை. இக்குறளிலே அமைந்த ஆற்றல் என்ற சொல்லிற்கு கைமாறாக கொடுத்தல் என்றே எல்லோரும் உரை தந்துள்ளனர். ஆற்றல் என்பதற்கு திறமை, பொறுமை, தணித்தல், மிகுதி, பெருமை, முயற்சி, ஞானம், ஆண்மை, வலி, வெற்றி, செய்தல், சுமத்தல் என பல பொருள்கள் உண்டு. எனவே வையகத்திற்குரிய ஆற்றல் பொறுமை, சுமத்தல் என்றும் வானகத்திற்குரிய ஆற்றல் தணித்தல் என்றும் பொருள் காணக் கூடியதாக உள்ளது. இதனையே வள்ளுவரும் எண்ணிருப்பார்.

பொறுமை என்ற அதிகாரத்திலே

"அகழ் வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வாரைப் பொறுத்தல் தலை."

என்னும் குறளுக்கு அகழ்வாரைத்தாங்கும் நிலம் போல தன்னையகழ்வாரை வீழாமற்றாங்கு நிலம் போல் என பரிமேழகரே உரை தந்துள்ளார். இங்கே சுமத்தல் என்ற பொருளில் தரப்பட்டுள்ளது. ஆனால் இதைவிட மேலான இன்னொரு ஆற்றலும் இதனுள் பொதிந்துள்ளது. நிலத்தை வெட்டி வெட்டி தோண்டும் போதெல்லாம் நிலம் பொறுமையை சாதிப்பதோடு எதிர்மாறாக வெட்டிக்களைத்தவர் தாகசாந்தி பெற அமிழ்தம் போன்ற நீரையல்லவா கொடுக்கிறது. இது இன்னா செய்யாமை என்ற அதிகாரத்தல் கூறப்பட்ட

"இன்னாசெய் தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயஞ் செய்து விடல்"

என்னும் உயர்ந்த பண்பாகிய ஆற்றலுக்கு உதாரணமாகாதா? ஏன்? நாடு என்ற அதிகாரத்திலே ஒன்பதாவது குறளிலே

"நாடென்ப நாடா வளத்தன" என்று கூறினாரே, இதற்கு தங்கண்வாழ்வார் தேடிவருந்தாமல் அவர்பால் தானேயடையுஞ் செல்வத் தையுடையவற்றை நூலோர் நாடென்று சொல்லுவர் என்று பரிமேலழகரும், தேட வேண்டாத வளத்தினையுடைய நாட்டை நாடு என்று சொல்லுவர் என மணக்குடவரும் உரை கணடுள்ளபடியாலும்,

"உண்டிகொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்ற மணிமேகலையின் கூற்றுக்கொப்ப பூமியில் உள்ள அனைத்து ஜீவராசிகளுக்கும் உணவைக்கொடுத்து உயிரைப் பாதுகாக்கும் அந்த உயரிய ஆற்றலை போற்றாமல் இருக்க முடியுமா?

வளரும்.........



# உள்ளத்தனையது உயர்வு.

இலை குழைகளுடன் இருண்ட குகைகளில் தனது வாழ்வை அமைத்துக் கொண்ட அன்றைய மனிதனை விட இன்றைய மனிதன் முற்றிலும் மாறி விட்டான். பறவையை கண்டு விமானத்தை படைத்தான். எதிரொலி கேட்டு வானொலி படைத்தான். காசி நகர்ப் புலவர் பேசும் உரையை காஞ்சியில் கேட்பதற்கு கருவி செய்தான். இன்று வானத்திலேறி சந்திர மண்டல வாசலையும் தொட்டு விட்டான். இத்துடன் விட்டு விட்டானா? செவ்வாய் கிரகத்திலும் குடியேற நினைக்கிறான். இத்தகைய பரிணாம வளர்ச்சிக்கும் பாரதூரமான வளர்ச்சிக்கும் காரணம் என்ன? அவன் உள்ளத்துள் கொளுந்து விட்டு இடைவிடாது எரிந்த முயற்சியும் தளராத ஊக்கமுமே ஆகும். இத்தகைய பல மனிதர்களின் கூட்டு முயற்சியே இன்றைய விஞ்ஞான புதுமைகளுக்கு விளை நிலமாக அமைந்துள்ளன. இம் முயற்சிக்கும் ஊக்கத்திற்கும் அளவுகோல் என்ன என்று யாரும் வினாவலாம். இதோ வள்ளுவன் கூறுகிறான்.

"வெள்ளத்தனையது மலர் நீட்டம் மாந்தர் தம்
உள்ளத்தனையது உயர்வு"

நீர்ச்செடிகளின் தண்டுகள் எவ்வாறு நீரின் தன்மைக்கு ஏற்ப நீண்டு சுருங்குகின்றதோ அதுபோன்றே மனித வாழ்வின் உயர்வும் தாழ்வும் அவர்களின் மன ஊக்கத்திலேயே தங்கியுள்ளது. என்கிறார். இதனையே பின் வந்த ஒரு கவிஞரும்

"தண்ணீர் உயர்ந்தால் தாமரை உயரும் தன்மையை அறியாயோ உன் எண்ணம் வளர்ந்தால் இன்பம் வளரும் என்பதை அறியாயோ" என்று வினாவுகிறார். எனவே நிலத்தின் தன்மையே பயிர்க்குள்ளது போன்று மனித வாழ்வின் உயர்ச்சிக்கு அவனது முயற்சியும் ஊக்கமும் இடைவிடாத உழைப்புமே காரணமாகும். என்பதை எவரும் மறுப்பதற்கில்லை. இதனை அன்றைய புலவர்கள் முதல் இன்றைய கவிஞர்கள் வரை எடுத்துக் கூற தவறவில்லை. ஊக்கமது கைவிடேல் என்றார் ஔவையார். சோம்பல் மிகக் கெடுதி பாப்பா என்று குழந்தைகளுக்கே முயற்சியின் சிறப்பினை உணர்த்தி னார் பாரதியார்.

எல்லாம் அவன் செயல். அவனல்லால் புவி மீது ஓர் அணுவும் அசையாது என்பது ஆன்றோர் வாக்கு. ஆனால் இப்படியே காலம் காலமாக இறைவன் மீது பழியை போட்டு விட்டு முயற்சியின்றி முன்னேற்றமின்றி வாழ்வதனை வள்ளுவர் வெறுத்தார். இதனாலேதான்

"தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சிதான்
மெய் வருந்தக் கூலி தரும்"

என்ற குறளின் மூலம் முயற்சியின் சிறப்பினை மிகவும் உயர்த்திக் காண்பித்துள்ளார். முயற்சி செய், ஊக்கம் உடையவனாய் இரு என்று உலக மக்களுக்கு போதித்ததுடன் வள்ளுவர் விட்டு விடவில்லை. முயற்சி செய்தால் உள்ள நன்மையும் முயற்சி இல்லாவிடின் உள்ள கேட்டையும் கூறி எச்சரிக்கின்றார்.

"முயற்சி திருவினையாக்கும் முயற்சி இன்மை
இன்மை புகுத்தி விடும்"

என்று உடன்பாடு எதிர்மறை இரண்டையும் மக்களுக்கு புரிய வைக்கிறார். இவர் மட்டுமல்ல இவருக்கு பின் வந்த பாரதியார் கூட தமது நடிப்புச்சுதேசிகள் என்ற கவிதையில் "ஊக்கமும் உள வலியும் உண்மையில் பற்றுமில்லா மாக்களுக்கு ஓர் கணமும் கிளியே வாழத் தகுதியுண்டோ" என்று கேட்டு ஊக்கமில்லாதவன் ஒரு கணமேனும் வாழத் தகுதியற்றவன் என்று எள்ளி நகையாடுகின்றார்.

அசைவிலா ஊக்கமுடையான் உழைக்கு ஆக்கம் வழி கேட்டுச் செல்லும். இத்தகைய அசைவிலா ஊக்கம் அவன் உள்ளத்தில் இருந்தே வருதல் அவசியம். உயர்ந்த சிந்தனைகளுடன் கூடிய முயற்சியே ஒருவனை உயர்விக்கும். இதனால்தான் உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல் என்று கூறினார். உள்ளத்தில் உண்மை ஒளி உண்டாகாவிடில் வாழ்வினில் ஒளி எவ்வாறு உண்டாகும்? உள்ளமும் வாக்கும் தூயதாக இருப்பவன் ஒருவனின் முயற்சியே மனித குலத்திற்கு மகத்தான நன்மை பயக்கும் ஆக்கங்களை உருவாக்கக் கூடியதாக இருக்கும் மனத்துக்கண் மாசில்லாது தன் என்பும் பிறர்க்குயிராகி தமக்கென வாழாது தன் உயிர் போல் மன்னுயிரையும் நேசித்து அன்பு, இரக்கம் என்னும் குணங்களுடன் வாழ்ந்தால் நமக்கு உயர்ச்சி நிச்சயமாக உண்டு.

செய்யும் தொழிலை சோம்பலின்றி செய் அதுவே வீண் எண்ணங்களை மனதில் இருந்து அகற்றும் என்ற அன்னை சாரதாவின் அறிவுரையை மனதிற் கொண்டும், சோம்பலும் சோர்வுமாக நூறாண்டு வாழ்வதனை விட பெரு முயற்சியுடன் ஒருநாள் வாழ்வதே சிறந்தது என கருதி தெரு விளக்கிலிருந்து கல்வி கற்று நாட்டின் ஜனாதிபதியான லிங்கன் போன்றோரின் அரிச்சுவட்டினை பின்பற்றி உழைத்து உயர்வு பெறுவோமாக.

இ.உமா,
கலைப்பீடம், முதலாம் வருடம்,
யாழ். பல்கலைக்கழகம்.

# விஞ்ஞானமும் மனித வாழ்க்கையும்



ஒரு மனிதன் உயிர்வாழ மிகமிக அடிப்படைத் தேவைகளாக காற்று, நீர், உணவு, உறையுள் போன்றன இன்றியமையாதனவாக விளங்குகின்றன. ஆனால் இன்றைய மனிதன் உண்பதையும், உறங்குவதையும் மாத்திரம் செயற்பாடாக கொள்ளாது சிந்திக்கவும், முயற்சிசெய்யவும், சாதனைகள் புரியவும் கூடிய பகுத்தறிவை கொண்டுள்ளான். இதனால் மனிதனுக்கு கல்வி,போக்குவரத்து, தொலைத்தொடர்பு, சுகாதாரம், பொழுதுபோக்கு போன்றனவும் அவசியமான அடிப்படைத் தேவைகளாகும். இத்தேவைகளுடன் பின்னிப்பிணைந்ததாகவே விஞ்ஞானம் காணப்படுகின்றது.

அவ்வகையில் நாம் எடுத்து நோக்கும் போது அன்றாட வாழ்வையே நடத்த, மனிதனை உயிரோடு வைத்திருக்க முதற்கண் காற்றும், நீரும் அவசியம். நைதரசன், காபனீரொட்சைட், ஒட்சிசன் இன்னும் ஒரு சில வாயுக்களின் கலவையாகவே வளி காணப்படுகிறது. ஐதரசன், ஒட்சிசன் இரண்டும் இணைந்த நீர் இன்னும் ஒரு சில வாயுக்களின் கலவையாகவே வளி காணப்படுகிறது. ஐதரசன், ஒட்சிசன் இரண்டும் இணைந்த நீர் என்னும் தண்டவாளங்களே மனிதப்புகைவண்டியை இழுத்து செல்ல உதவுகின்றது.



உணவை எடுத்து கொண்டால் அதில் விஞ்ஞானம் பங்கு வகிக்கின்றது. உணவாக பயன்படல், உணவுத்தயாரிப்பில் வழிவகுத்தல் என்பன இரசாயன மாற்றங்களாலும் மேற்கொள்ளப்படுகிறது. 'உப்பில்லாப்பண்டம் குப்பையிலே' என்ற தொடருக்கமைய இந்த சோடியம் குளோட்ரைட்தான் நம் உணவு குப்பைக்கு செல்வதா அல்லது வயிற்றுனுள் செல்வதா எனத் தீர்மானிக்கின்றது.

மனித வளர்ச்சியில் முக்கியமான செயற்பாடு தீயின் பயன்பாடாகும். இன்று எதற்கும் தீ ஒரு அத்தியாவசியமான சக்தி முதலாகும். சல்வர் போன்ற இரசாயன பொருட்களில் உருவானவைதானே இன்றைய தீப்பெட்டிகள். இவ்வாறு மனிதனது வாழ்க்கையில் விஞ்ஞானம் தவிர்க்க முடியாத பல பங்குகளை வகிக்கிறது.



கல்வியை வளர்க்க இன்று பல வழிகளில் விஞ்ஞானம் உதவுகிறது. மாணவர்கள் பயன்படுத்தும் தாள்கள், பேனைகள், பென்சில்கள் என்று ஒவ்வொன்றிலுமே விஞ்ஞானநங்கை நடனம் புரிகிறாள்.

இன்றைய இயந்திர வாழ்க்கையில் பல ஆயிரம் அடிகளுக்கு மேல் பறக்கும் விமானங்களும் சர்ரென்று சாலையில் வழுக்கும் மேட்டார் வண்டிகளும் விர்ரென்று நீரைக் கிழித்து பறக்கும் கப்பல் களும் ஓடுவது விஞ்ஞானம் தந்த வெகுமதியால்தானாகும்.

ஓர் இரசாயனமாற்றத்தின் விளைவில்தான் மின்சாரமும் நமக்கு கிடைக்கின்றது. இலத்திரன்களின் பாய்ச்சலே மின்னோட்டம் எனப்படு கின்றது. இந்த 21வது நூற்றாண்டின் மின்சாரப்பயன்கள் சொல்லுக் கடங்காதவை.

அன்றிலிருந்து இன்றுவரை மனிதவாழ்வில் பொன்னும் முக்கிய பங்கு வகிக்கின்றது. இன்றும் கூட அழகிய ஜொலிக்கும் தங்கநகை கண்டு மயங்காதவர்கள் மிகவும் குறைவு. இதுவும் விஞ்ஞானத்தின் பரிசாகவே காணப்படுகின்றது.

இன்றைய நவீன மருத்துவத்துறையின் கண்களெனவே இரசாயனத்தை கூறலாம். இரசாயன நுட்பங்களும் இரசாயன பொருட்களும்தானே இன்றைய குளிசைகளுக்கெல்லாம் அடிப்படை. நாம் பயன்படுத்தும் மருந்துகளிற்கெல்லாம் அடிப்படை நாம் பயன்படுத்தும் மூலம் இரசாயனம் ஆகிய விஞ்ஞானம்தான். மேலும் விவசாயத்திலும் கதிர் தொழிற்பாட்டு சமதானிகள் பயன்படுகின்றன. உதாரணமாக 32P ஐ கூறலாம். பசளை வகை, உரவகை என்றும் பலவகைகளில் உதவுகிறது.

இவ்வாறாக மனித வாழ்விலே விஞ்ஞானமானது பல வகையிலும் அத்தியாவசியமானதாக காணப்படுகிறது. இதனால் மக்களுக்கு பல நன்மைகளே கிடைக்கிறது. எனவே “விஞ்ஞானமின்றி மனிதனில்லை” எனக்கூறலாம்.

இ.சிவரூபன்,
A/L 2009,
யா/ஹாட்லிக் கல்லூரி.

# அமைதியின் ஊற்று

முகவரியிழந்த மனித குல மாக் அவலங்களும், ஆர்ப்பரிப் புக்களும், அங்கலாய்ப்பும் அதி கரித்து, வாழ்வின் வளம் குன்றி, இருப்பின் பொருள் தேடி அலை யும் மக்கள் கூட்டமாக வாழும் எமக்கு கிறிஸ்து பிறப்பு வழங்கும் செய்தி நம்பிக்கையாக இருக் கிறது.

கிறிஸ்து பிறப்பு நம்பிக கையின், புதுமையின் செய்தியாக இருக்கின்றது. மனித இனத்தின் தேடல் அதிகரித்து, உண்மையான வாழ்விற்கான தாகம் அதிகரித்து காணப்பட்ட தருணத்தில் நம்பிக்கையின் ஒளிக்கீற்றாக மனுவுடல் ஏற்றவர் எம்பெருமான் யேசுக்கிறிஸ்து ஆவார். அவரது பிறப்பால் வாழ்வு குளிர்மை அடைந்தது. புத்துயிர் பெற்றது. அனைத்து மனித இனமும் அர்ச்சிக்கப்பட்டது.

சிறிய பாலன் யேசு மண்ணில் உதிக்கையில் விண்ணி லிருந்து பெரும் பரிசு ஒன்றை கொண்டு வந்தார். அப்பரிசு "அமைதியாகும்" இவ் அமைதியானது முழுமனித விடுதலை சார்ந்த அமைதியாக இருக்கிறது. வெறுமனே உலகியல் ரீதியான அமைதியாக நாம் வரையறைப்படுத்துகையில் நாம் யதார்த்தத்திலிருந்து தவறு கின்றோம். இவ் அமைதியானது ஒவ்வோர் தனிமனித உள்ளத்தில் அடி ஊற்றிலிருந்து பிறப்பெடுக்கவேண்டும்.

சிறு ஊற்றாக பிறக்கும் இவ் அமைதி காட்டாறாக பாய்ந்து பயணிக்க வேண்டும். அப்போது நாம் விரும்பி தேடும் அமைதியான நிம்மதியான வாழ்வு எமக்கு நிலையாக கிடைக் கும்.

வாழ்வின் மாண்பை பெறுமதியை முழுமையாக யேசு வாழ்ந்தார். ஏழ்மை, எளிமை ஊடாக வாழ்வின் முழுமையை அடைய லாம் என்பதே யேசுவின் வழியாக இருக்கிறது. "தம்மையே வெறுமை யாக்கி அடிமையின் வடிவை ஏற்று மனிதருக்கு ஒப்பானார்" (பிலி 2.7) என்ற புனித பவுலின் வார்த்தைகள் இதையே எமக்கு எடுத்தியம்பு கின்றது.

எமது இன்றைய வாழ்வு அமைதிக்கான ஆவலாகவும் தேடலாகவும் இருக்கின்றது. எதிர்காலத்தையும், நிகழ்கால பாது காப்பையும் நிலைநிறுத்த நாம் பாடுபடுகின்றோம். எம்மை சூழ துன்பங்களும், சாவுகளும் அதிகரிக்கின்றது. பலர் அழுதுகொண்டும்,

வாழவிருப்பம் இல்லாமலும் வாழ்ந்து கொண்டு இருக்கிறார்கள். இவர்கள் புத்துயிர் பெற வாழ்வில் பற்று கொள்ள நாம் ஒவ்வொருவரும் கருவிகளாக மாறுவோம்.

எமக்கு கிறிஸ்து பிறப்புவிழா அர்த்தம் கொடுக்க கிறிஸ்து போல் ஒருவரை ஒருவர் தாங்கி சுமந்து செல்வோம். துன்புறுபவரின் அருகில் சில நிமிடங்களை செலவு செய்வோம். நாமும் பாலகன் யேசுவின் அமைதியின் கருவிகளாக மாறுவோம். புறப்படுவோம். தயாராகுவோம்.



அருட்தந்தை. தே.யூட்தாஸ்,
உதவிப் பங்குத்தந்தை,
பருத்தித்துறை.

## சின்ன யேசுவே என்னில் வாரும்

பாருக்கு ஒளி கொடுக்க பரம் பொருளாய் வந்தவரே
மூவுலகும் போற்றுகின்ற தெய்வத் திருமகனே
எம் பாவச்சுமை போக்க தன்னுயிரை ஈந்தவரே
சின்ன யேசுவே என்னில் வந்திடுவாய்.

மனிதர் எம்மை மறக்கும் போதும்
மலையாய் சோகம் சூழும் போதும்
என்னை விட்டு பிரிந்திடாமல்
என்னில் வந்திடுவாய் சின்ன யேசுவே

வரண்ட வாழ்வில் வசந்தம் வேண்டும்
மகிழ்வாய் என்றும் வாழ வேண்டும்
அமைதி எங்கள் வாழ்வில் வேண்டும்
சின்ன யேசுவே என்னில் வந்திடுவாய்.

யே. டியூளினி,
புனித அந்தோணியார் ஆலயம்,
மணற்காடு.

# மதங்கள் காட்டும் மனிதம்

உலகில் வாழும் உயிரினங்களுள் மனிதன் அரிய படைப்பாகும். "மானிடராய் பிறத்தலரிது" என்று ஔவையாரும் கூறியுள்ளார். ஏனெனில் ஆறாம் அறிவான பகுத்தறிவையும் இனிய சிரிப்பையும் இணைத்துக்கொண்ட உயிரினம் மனிதனாவான்.

ஆரம்ப காலங்களில் விலங்குகள் போல வாழ்ந்த மனிதனும் காலப்போக்கில் வாழ்வின் வழிமுறைகளை வகுத்துக்கொண்டான். அதுபோலவே மனதின் பயங்களை விலக்க இறைவன், கடவுள் என்ற ஒரு பிடிப்பும் வளர்ந்தது.

பல்வேறு மனித சிந்தனைகளின் வேறுபட்ட சங்கமங்கள் வேறு வேறான மதங்கள் எனும் தோற்றப்பாட்டை தந்தன. இவற்றி கோட்பாடுகளும் வரையறுக்கப்பட்டு வேதமாயும், விவிலிய வேத மாகவும், திரிபிடகமாயும், திருக்குரானாகவும் மனிதன் வாழவேண்டிய வழிமுறைகள் வகுத்து எழுதப்பட்டன.

மனித சிந்தனையின் இந்த உயரிய வளர்ச்சிப் படிநிலை தோன்ற இரண்டு அடிப்படை காரணங்கள் இருந்தன. வாழ்வின் பல்வேறு பரிணாமங்களில் வரும் துன்பங்களால் ஏற்படும் பயத்தை போக்க ஒரு நம்பிக்கை. இரண்டாவது மனதில் பயம் இல்லாவிடில் மனிதன் தான்தோன்றித்தனமாக வாழ்ந்து தனக்கும் மற்றயவருக்கும் இடையூறுகளை தராது அவனுக்கு வாழவேண்டிய கட்டளைகளை தருவது. மதங்கள் தரும் உயரிய வழி காட்டல் மனிதனை சீரிய பாதையில் செல்ல வைக்கிறது.

கீதையின் உயரிய வரிகளோ, பைபிளின் பத்து கட்டளைகளோ, திருக்குரானின் மதச்சட்டங்களோ, பௌத்தத்தின் மும்மணிகளோ இல்லாவிடில் மனிதனுக்கு இந்த உலகின் வாழ்விலும் மறுமை எனும் வாழ்விலும் நம்பிக்கை அழிந்திருக்கும் இக்காலத்தின் அரசியல் அமைப்பும், மனித உரிமைகள் சட்டமும் காவல் துறையும் மனிதம் எனும் பண்பைப் பாதுகாக்க உள்ளன. இவைகளற்ற காலத்தில் மதங்களின் வழிகாட்டலே மக்களை தடுமாறாது வைத்திருந்தது.

தற்போது மதங்களை நேசிக்காத மனிதர்கள் அதிகம். இறைவன் இல்லை என்று வாதிடுபவர்கள் அனேகம். ஆடம்பரங்களிலும், உல் லாசமான வாழ்வினையும் நேசிப்பவர்களே

ஏராளம்.. மறுபுறமாக உலகில் துன்பங்களும், வேதனைகளும், தீர்க்க முடியாத சோதனைகளுமே நிறைந்துள்ளன.

மதங்களின் நிலை பேறான தன்மையை விமர்சிப்பதை விட அதை நம்பும் போது மனதில் உறுதியும் நம்பிக்கையும் பிறக்கின்றது. நமக்குரிய வழிகாட்டலும் அந்த நம்பிக்கையில் இருந்த வருகின்றது. இதனால் நாம் துணிவு பெறுகிறோம்.துணிவான மனதிலிருந்து உறுதியான தீர்மானங்கள் எழகின்றன.இவை வெற்றியைத் தருகின்றன.

வெற்றியின் பின்னணியில் மகிழ்வும் அமைதியும் சுபீட்சமும்தானே நிறையும். எனவே அந்த இத்தனையும் இனிய நம்பிக்கையி லிருந்தே பிறக்கின்றன. எனவே அந்த நம்பிக்கையை இறைவன் என்று நம்பினால் அதற்குரியவழிகாட்டல்களை மகிழ்வுடன் பின்பற்றும்போது உலகின் அமைப்பும் மாறும்.

இந்துமதத்திலுள்ள மனுநீதி மக்கள் இனிமையாக வாழ கட்டளைகள் இடுகின்றது. பைபிளின் பத்து கட்டளைகள் போதும் வாழ்வின் நம்பிக்கையை உரமேற்ற. திருக்குரானின் சகோதரத்தவ மென்ற உணர்வு இன்றுவரை உலக முஸ்லிம்களை மதத்தால் ஒன்றுபட்டு வலிமை பெறவைத்துள்ளது. புத்தர் பெருமானின கருணை எண்ணம் வட.இந்தியாவின் மிருக பலிகளை நிறுத்தி அன்பு ஊற்றை திறந்தது. இத்தனை நன்மைகள் கிடைத்தால் இறை எனும் நம்பிக்கை வேரை நவீன உலகின் மக்களும் ஆட்டி அசைக்காது பாதுகாத்து நடந்தால் உலகில் சட்டங்கள் தேவையில்லை.

இத்தனை நன்மைகளும் தரும் மதங்கள் உயரிய வாழ்வை வாழ்ந்து காட்டியவர்களால் உரமேற்றப்பட்டவை. இன்றோ மதங்களிடையே பூசல்களும் வெறி உணர்வும் வளர்கின்றது. இவை கடவுள் எனும் நம்பிக்கையை கேள்விக் குறியாக்கி மனித வாழ்வை சின்னாபின்னப் படுத்துகின்றன. மக்களுக்கு இவற்றில் நம்பிக்கை இழக்கவைக்கின்றன.

பூசல்களற்ற சிந்தனைகள் சிறந்த வாழ்வைத் தரும். மதப் பெரியோரும் மனிதம் எனும் உணர்வை பொன் போலப் பாதுகாகக வேண்டும். ஏனெனில் சமூகத்தின் அமைதியான வாழ்விற்கு தற்போது பல நிறுவனங்கள் பணி புரிகின்றன. அவற்றில் மத நிறுவனங்கள் ஆண்டாண்டு காலமாக மக்களின் சமய நம்பிக்கைகள், சடங்குகளுடன்

பின்னிப் பிணைந்து காணப்படுவதால் அவர்களை சீரிய வழியில் நடத்தும் பொறுப்பு மத நிறுவனங்களுக்கு உண்டு.

இறைவனில் நம்பிக்கை, விசுவாசம் தீயவற்றில் மக்களுக்கு இருக்கும் பயம் என்பன மதங்களின் வழிகாட்டலுக்குத் துணை நிற்பன. அவற்றின் துணையுடன் மனித விழுமியங்கள் தானாகவே நிலை பெறும் என்பதை உணர்ந்து மக்களின் பெரும் எண்ணிக்கையான மன நம்பிக்கை எனும் உணர்வை எதிராக பயன்படுத்தி நாடுகளில் நடைபெறும் மதச்சண்டைகளை நிறுத்தி வன் செயலால் துன்புறும் உலகை சிறப்பாக வழிகாட்டும் பொறுப்பு மதச்சார்பானது என்பதை உணர்ந்து பெரியோர் மதங்கள் மனித வாழ்வின் விழுமியங்களைப் பாதுகாக்க துணைநிற்க வேண்டும் என்பது தற்போது நம் அனைவரின் முன்னுள்ள சிறந்த பணி ஆகும்.

திருமதி. தனலக்சுமி சிவானந்தம்,
B.Aபுவியியல் சிறப்புக்கலை,
ஆசிரியர்,
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.

## ஒளியேற்றி இருளகற்றினோம்!

பருத்தித்துறை நெல்லண்டை அஞ்சலியகத்தில் 08/11/2007 அன்று அஞ்சலிக் குடும்பத்தினரும் அஞ்சலி இளையோர் கழகமும் அருட்தந்தை எஸ். டேமியன் அவர்களுடன் இணைந்து தீபாவளி திருநாளை வெகு விமரிசையாக கொண்டாடினர்.

கலை நிகழ்வுகளை நடாத்தியதோடு நூற்றுக்கணக்கான தீபங்கள் ஏற்றியும் சிற்றுண்டிகள் பரிமாறியும் தீபத்திரு நாளை கொண்டாடி மகிழ்ந்தனர்.

இதே போல் எதிர்வரும் நத்தார் பண்டிகையை 29/12/2007 அன்று வெகு விமரிசையாக கொண்டாட அஞ்சலிக் குடும்பமும், அஞ்சலி இளையோர் கழகமும் இணைந்து தயாராகிக் கொண்டிருக்கிறது.



“காதல் செய்க உன் ஜென்மம் வெல்க உயிர்தந்த, உடல்தந்த உன் பெற்றோரை காதல் செய், ஒளி தந்த வழி தந்த உன் குருவை நீ காதல் செய், ஒரு நேரம் பசி தீர்த்த உன் சுற்றம் நீ காதல்செய், உயிர் தந்து உயிர் காக்கும் உன் நட்பை நீ காதல் செய்” நேசிப்போம் வாழ்க்கையில் சந்திக்கும் எந்த நல்ல விடயங்களையும் நேசிப்போம். நேசம் என்பது நிஜம், உள்ளார்ந்த நேசம் என்றும் உருக்குலைந்து போனதில்லை. தாயை நேசிப்போம், தந்தையை நேசிப்போம், உறவுகளை நேசிப்போம் எல்லாவற்றுக்கும் மேலாக நமக்கு கிடைத்திருக்கும் இந்த வளமான வாழ்வை நேசிப்போம். இந்த வளமான வாழ்வை வழங்கிய வள்ளலை நேசிப்போம்.

வாழ்க்கை என்பது நமக்கு வாழ்வதற்காக வழங்கப்பட்டது. வேண்டா வெறுப்புடன் வாழ்வது வாழ்க்கையல்ல. நமக்கான வாழ்வை இரசித்து வாழ வேண்டும் இரசனை என்பது நமது வாழ்வியலுக்கு வலுவானது. வந்தோம் வாழ்ந்தோம் என்பது வாழ்க்கையல்ல. நாம் வாழ்ந்ததற்கான வரலாறுகளை நம் சந்ததிக்கு விட்டுச் செல்ல வேண்டும்.

மனித வாழ்க்கை என்பது நமக்கு கிடைத்த வரப்பிரசாதம். இந்த வாழ்வின் மூலை முடுக்குகளில் எல்லாம் செல்வோம், சந்து பொந்துகளில் எல்லாம் சஞ்சரிப்போம். மரிக்கும் போதும் நாம் வாழ்வை ரசிக்காத நாளில்லை என்று மார்தட்டிக் கொள்வோம். சிக்கனம் என்பது சிரிப்பில் மட்டும் வேண்டாம். துன்பத்திலும் சிரிப்போம், கவலைகளோடும் கண்ணீரோடும் கரம் கோர்த்துக் கொள்வோம்.

“மனித வாழ்க்கை என்பது மூளையோடும் வயிற்றோடும் முடிந்து விடுகிறது, அது இதயங்களை நோக்கி ஏறவேயில்லை” இன்சொல் பேசி இதயங்களை திறப்போம். துன்பத்தோடு பிறந்து துன்பத்தோடு வளர்ந்து துன்பத்தோடு மரித்துப் போகும் மனிதருமில்லை அதேபோல் இன்பத்திலே பிறந்து இன்பத்திலே வளர்ந்து இன்பத்திலே இறந்து போகும் மனிதருமில்லை. இன்பம் பாதி துன்பம் பாதி இதுதான் உலக வாழ்வின் நியதி. பிறர் சிரித்தால் சேர்ந்து சிரிக்கத் தெரிந்த நாம் பிறர் அழுதால் அவர் கண்ணீர் துடைக்க கரம் கொடுக்கவும் பழகிக் கொள்வோம்..

"கொடுப்பவன் பெறுபவன் இருவருக்கும் இழப்பில்லாத அதிசய தானம் தான் சிரிப்பு" சிரிப்போம், சிரிப்பால் சினேகம் கொள்வோம். இதழ்களில் ஓடும் புன்னகையால் இதயங்களை வெல்வோம்.

தி.சிவதர்சினி,
H.N.D.A இரண்டாம் வருடம்,
யாழ். உயர் தொழில்நுட்ப கல்லூரி.



---

# GOOD MANNERS.

Manners show the likes, dis liketastes, feelings and temper of a man. Good manners are the mark of the decency of a person to live in a society. we must have the qualities that all the people in the society like.

In every socoety there are same forms of behaviours that are accepted as good manners. They come with a good education and upbringing. They are not forced upon any one but with good manners. We can win everyone's praise.

Good manners are to be learnt from child hood itself A child must learn to obay his elders and also show respect to them. He must talk politely to visiters. He must also treat children of his own age with fairness.

Good manners show a person to be a gentleman. They are necessary to win the Friendship and respect of every one. We can not succeed in without manners.

Miss.R.Vaishnavi,
methodist Girls' High School.
Point-Pedro.

# பொது அறிவு

## *1. 2007 இற்கான நோபல்பரிசுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.*

*மருத்துவத்துறையில் 3மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் கூட்டாக பெறுகின்றனர். 1. இத்தாலியில் பிறந்து அமெரிக்காவில் வசித்துவரும் மரியோகபெச்சி, 2. இங்கிலாந்தைச் சேர்ந்த மார்ட்டின்ஈவான்ஸ் அமெரிக்காவில் குடியுரிமை பெற்றுள்ள ஆலிவர்ஸ்ஸ்பிதர்ஸ். இவர்கள் எலியின் மரபணு மாற்றம் குறித்து ஏற்படும் விளைவுகள், நோய்கள், இதனால் மனிதனுக்கு ஏற்படும் இலாபங்கள் தொடர்பான ஆய்வை மேற்கொண்டனர். அதற்காகவே பரிசு வழங்கப்படுகிறது.

*பருவநிலை மாற்றம் தொடர்பாக உலகமக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்திவரும் அமெரிக்காவின் முன்னாள் துணை அதிபர் பேராசிரியர் அல்கோர், இந்தியாவைச்சேர்ந்த ராஜேந்திரகுமார் பச்செளரி தலைமையிலான குழுவினர் ஐ.நா பருவநிலை மாற்றம் தொடர்பான பன்னாட்டு கூட்டமைப் புக்காக நோபல்பரிசு பெறுகின்றனர்.

*பிரிட்டனைச்சேர்ந்த பிரபல நாவலாசிரியை டோரிஸ்லெஸ்ஸிங் இலக்கியத்துக்கான நோபல்பரிசுக்காக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இலக்கியத் திற்கான நோபல்பரிசு பெறும் 11வது பெண் என்ற பெருமையை பெறுகிறார். இவர் ஈரானை பிறப்பிடமாக கொண்டவர்.

2. திபெத்தின் ஆன்மீகத்தலைவர் தாய்லாமா அமெரிக்காவின் உயர்குடிமகனுக்கான விருதைப் பெற்றுள்ளார்.

3.அமெரிக்காவின் ஹவாய் ஆதீனம் 2007 இற்கான இந்துமத மறுமலர்ச்சிக்கு அரும்பாடுபட்ட "சிறந்த ஆன்மீகப் பணியாளர்" விருதினை யும், கெளரவத்தையும் சிவத்தமிழ்ச்செல்வி செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி பெற்றுள்ளார்.

4. உலக சினிமாவில் முதன்முறையாக விக்ரம் நடிக்கும் "கந்தசாமி" என்ற தமிழ்ப்படத்திற்கு இலத்திரனியல் அழைப்பிதழ் தயாரிக்கப்பட்டுள்ளது.

க. சுதர்சன்,
A/L 2008,
ஹாட்லிக்கல்லூரி.

# வாழ்க அஞ்சலி



வாழ்க அஞ்சலி வாழ்க
வட மண்ணில் வந்துதித்த
வானத்து வெண்ணிலவே!
வசந்த கால மல்லிகையே
வையத்தின் சேவைக்கு
உனையீந்தாய்
உளவளமும் உள்ள கலைவளமும்
பொது மொழியாம் ஆங்கிலமும்
புதுமைமிகு அறிவியலும்
மழலைகளின் மனக்குறைக்கு
புதுமைமிகு விளையாட்டும்
வசந்தம் தரும் வாழ்க்கைக்கு
மகளிருக்கு தொழில்வளமும்
கொட்டிலில் வாழும் ஏழைக்கு
கொடும் பசியை போக்கவென
கொடுத்தாயம்மா உன் உணவை
தாய் போல அரவணைப்பாய்
தந்தை இருவர் கரம் கொண்டு
இத்திமரத்தாய் வாசலில் - உன்
உயர்ந்த சேவைகள் இன்னும்
உலகில் உயரட்டும் - எம்
இனிய அஞ்சலி நீ வாழ்க.

வி.த. உதயகுமார்
தும்பளை.

**நிகழ்காலத்தை மீட்டு, எதிர்காலத்தை எழுப்பப்போகும் இளம் உள்ளங்களில் ஒரு பிறளாத சமுகப்பற்றையும், எழுத்தாற்றலையும் இந்த "அஞ்சலி" ஏற்படுத்தும் என்று எண்ணுகின்றேன்.**
**சமுக வீணையில் சரிந்துகிடக்கும் நரம்புகளை அவிழ்த்துக் கட்டுவோம், அவசியமென்றால் அறுத்தும் கட்டுவோம்.**

**ஆசிரியர்**

# ஆபத்து விளிம்பிலுள்ள கற்போர்

க.சிவகுமார்
ஆசிரியர்,
யா/குடத்தனை.மெ.மி.த.க பாடசாலை

உலகளாவிய ரீதியில் ஊடுருவிய அறிவியற்சிந்தனைகள் விலகல் வேறுபாடு இன்றி அனைவருக்கும் கல்வியிலே சமசந்தர்ப் பத்தை ஏற்படுத்தி கொடுக்கும் கருத்தியலை வலியுறுத்தியது. இதற்கு துணையாக கல்விஉளவியலில் ஏற்பட்ட முன்னேற்றகரமான ஆய்வுகள் ஆபத்து விளிம்பிலுள்ள கற்போருக்கு துணை நிற்கும் வழிவகை களையும் நுட்பவியல்களையும் கண்டறியலாயின. இவர்களுக்கான கல்வி ஏற்பாடுகள் "சிறப்பார்ந்த கல்வி" என்ற வகையில் உயர்ந்த நிலையான கவன ஈர்ப்பை மக்கள் மத்தியில் பெற்றது.

ஆபத்து விளிம்பிலுள்ளோர் யார்? என்ற வினாவுக்கு பின்வரும் வகைகளில் உள்ளோரை சுட்டிக்காட்டலாம்.

* உடல்உள வளர்ச்சியில் பின்னடைவு கொண்டோர்.
* கற்கும் ஆற்றலில் பின்னடைவு கொண்டோர் அல்லது கற்றல் குறைபாடுடையோர்.
* நடத்தை நிலைகளில் குறைவு கொண்டோர்.
* வறுமையின் சூழமைவினால் கற்க முடியாதோராய் இருப்போர்.
* புலன்கள் மற்றும் தொடர்பாடற் குறைவு கொண்டோர்.
* ஆண், பெண் வேறுபாட்டினால் ஒதுக்கி விடப்படுவோர்.

உடல்உள பின்னடைவு என்பது உடல்உள தொழிற்பாட்டுத் திறன்சராசரியிலும் கீழ்நிலையில் இருத்தலும், தழுவும நடத்தையில் தாழ் நிலையில் இருத்தலுமாகும். கற்றல் குறைபாடு டையோர் என்பது கற்பித்தலை விளங் காதிருத்தல், மொழியை புரிந்துகொள்ளமுடியாது இருத்தல், கேட்டல், வாசித்தல், எழுதுதல், குறைபாடிருத்தல், எண்ஆற்றல் குறைவு முதலியவை கற்றல் குறை பாடிருத்தல் அடங்கும்.

நடத்தைக்குறைவு என்பதை எங்கள் நாட்டு இன்றைய சூழலில் காண லாம். உளச்சோர்வு, கவனப்பராமரிப்பு அற்றநிலை, வகுப்பறைச் செயற்பாடுகளை குழப்பும்நிலை, இலகுவில் கவனக்கலைப்புக்கு

உள்ளாகும் நிலை, அமைதியற்ற அவலம் முதலியன நடத்தைக் குறைவுக்கான எடுத்துக்காட்டுக்களாகும்.

மாணவரிடத்து நடத்தைக்குறைவு காணப்படுதலை பின்வரும் செயற்பாடுகளிலிருந்து அறிந்து கொள்ளமுடியும்.

* கவனக்குறைவும் எழுத்துப்பிழைகளும் ஏனோதானோ என்ற போக்கும் காணப்படல்.
* ஆழ்ந்த கவனத்தை கற்பித்தலின் போது செலுத்தாதிருத்தல்.
* நேரடியாகப்பேசும்போதும் கவனியாதிருத்தல்.
* பணிப்புரைகளை கவனியாதிருத்தல்
* செயற்பணிகளை ஒழுங்கமைக்க முடியாதிருத்தல்.
* மூளைக்கு வேலைகொடுக்கும் செயற்பாடுகளை பெருமளவிலே தவிர்த்துக்கொள்ளல்.
* பொருட்களை கவனமின்றி தொலைக்கும் சந்தர்ப்பங்கள் கூடுதலாக இருத்தல்.
* நாளாந்த செயற்பாட்டில் ஞாபகமறதி கொள்ளல்.

தொடரும்........

## அஞ்சலி உங்கள் சஞ்சிகை

எனவே இதை வளர்க்க உங்கள் விமர்சனங் களையும் காத்திரமான உங்கள் படைப்புக்களையும் எழுதி அனுப்புங்கள். பூப்பறிக்க கோடரி தேவை யில்லை. அஞ்சலியின் வளர்ச்சிக்கு உங்கள் அன்பான ஆக்கபூர்வமான விமர்சனங்களை எதிர் பார்த்து காத்திருக்கின்றோம்.

ஆசிரியர்.

# ஆங்கிலம் படிப்போம்.

## Describing objects.
### பொருட்களை விபரித்தல்

when we describe an object we can mention the following things.
ஒரு பொருளை விபரிக்கும் போது பின்வரும் விடயங்களை கருத்திற் கொள்ளலாம்.

1. Quality - தரம்/தன்மை
2. Size - அளவு
3. Shape - வடிவம்
4. Age - காலம்
5. Colour - நிறம்
6. Material - செய்பொருள்

1) Describing Quality :- தரம் / தன்மையினை விபரித்தல்

Here are some words to describe quality.

Pretty, Beautiful, nice

Eg :- I have a pretty dool.
It is a beautiful saree.
It is nice hand bag.

The underlined words describe the quality of the objects.

மேலே கீழ் கோடிடப்பட்ட சொற்கள் பொருட்களின் தன்மையினை விபரிக்கின்றன.

2) Describing size :- அளவினை விபரித்தல்.

Here are some words to describe size.
little,small,big,large,long,short.

Eg :- Little flower, Big elephant, Long river.
There is a small house.
My house is big.

PUBLIC LIBRARY
JAFFNA

The elephant is big.
It is a small animal.

மேலே கோடிடப்பட்ட சொற்கள் பொருட்களின் தரத்தினை விபரிக்கின்றன.

3) Describing shape :- வடிவத்தினை விபரித்தல்.
These words can be used to describe shape.
round, square, oval.

round bulb
oval shaped vase
The bulb is round
The flower vase is oval shape.

4) Describing age - பொருட்களின் காலத்தினை விபரித்தல்.
Here are some words to describe age.
old, new, young.

Eg :- old pen
new book
young plants

My bag is old
I watered the young plants.

5) Describe colour
Names of colours can be used to describe an object.
பொருட்களின் நிறங்கள் மூலம் அப்பொருட்களினை விபரிக்க முடியும்

Eg :- My shirt is blue.
Your bag is blue.
It is a brown pencil.

6) Describing material:- ஒரு பொருள் எதனால் செய்யப்பட்டுள்ளது என்பதை விபரித்தல்

Eg :- Plastic pen, Silk shirt, wooden chair.

It is a plastic chair
The table is wooden
It is a steel cupboard
I wear a cotton frock
மேலே கீழ் கோடிடப்பட்ட சொற்கள் ஒரு பொருளின் செய்பொருளினை விபரிக்கிறது.

* We can describe a bag in the following ways.
I have a bag.
It is beautiful
The bag is small
It is a new bag
Its colour is brown
It is a leather bag

The bag can be described in a sentence in the following way.

I have a beautiful small new brown leather bag.

எங்கு உதித்தால் வெளிச்சம் எல்லோருக்கும்
கிட்டுமென்று திசைகளை நாங்களே
தீர்மானித்து உதிப்போம்

# சமாதானமும் சீட்சமும்



உலகம் இன்று ஆழ்கடலில், சூழ்புயலில் சிக்கி தலைவனற்ற கப்பல் போல, கொந்தளிக்கும் கடலில் சீறி எழும் அலைகட்கு மத்தியில் தத்தளித்துக்கொண்டிருக்கிறது. கடந்த சில வருடங்களாக நடந்த, நடந்துகொண்டிருக்கின்ற போர்களால் உலகம் சின்னா பின்னப்பட்டு சீரழிந்து பலவந்தம் பலாத்காரம், பொறாமை, பேராசை போன்ற அலைகளால் மோதப்பட்டு சிறிது சிறிதாக அழிந்து கொண்டிருக்கிறது. மக்கள் அனைவரும் சமாதான தேவதையை உலகுக்கு கொண்டுவர கடும்தவம் புரிகின்றனர்.

சரித்திரம் தோன்றிய நாள் தொட்டு யுத்தங்கள் நடந்து வருகின்றன. யுத்தங்களால் இளைத்துப்போயிருக்கும் மக்களும், அழிந்து பாழ்பட்டு கட்டாந்தரைகளாக மாறியுள்ள விளைநிலங்களும், உருமாறி அழிந்து சிதைந்த நாடுகளும், நகரங்களும், தொழிற் சாலைகளும் முன்னைய நிலையை அடைய வேண்டுமானால் சமாதானம் மலர வேண்டும்.

ஒரு நாட்டை மற்றையநாடு உறிஞ்சி விழுங்கும் மனப்பான்மை நீங்கி, அந்நாட்டின் பொருளாதாரத்தால், கல்வியால், கலாசாரத்தால், இயற்கை கொடைகளால் மட்டுமன்றி ஏனைய நாடுகளும் பயன்பாடடைந்து முன்னேற வேண்டுமெனின் அது சமாதானத்தாலன்றி வேறொன்றாலும் முடியாது. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" என்ற மனப்பான்மையடன் இன மத மொழி வேறபாடின்றி சகோதர வாஞ்சையுடன் வாழ வைப்பது சமாதானம் ஒன்றே ஆகும்.

பெரும் வல்லரசு நாடுகளும், மற்றும் செல்வம் கொழிக்கும் நாடுகளும் அழிவுக்கருவிகளை உருவாக்க செலவு செய்யும் பணத்தை வளம் குறைந்த நாடுகளுக்கு கொடுத்து உதவ வேண்டும். மனிதனை மிருகமாக்கி படுகுழிக்குள் தள்ளும் பலவந்தம், பேராசை என்பன

அகன்று ஒவ்வொருவர் மனதிலும் சகோதர மனப்பான்மை, பொறுமை, தியாகசிந்தை, விட்டுக்கொடுக்கும்கும் மனப்பான்மை என்பன வளர வேணடும். அரசாங்கமும், மதத்தலைவர்களும் தத்தம் சமூகங்களை நன்னிலைக்கு கொண்டு செல்ல வழிவகை செய்ய வேண்டும்.

ஒவ்வொரு பெற்றோரும் வீட்டிலே சண்டையின்றி, தொல்லையின்றி, அன்னியோன்னியமாக வாழ்வதுடன் தங்கள் பிள்ளைகளையும் புரிந்துணர்வோடு சமாதானப்பிரியர்களாக்க முயல வேண்டும். யுத்தம் ஓய்ந்து சமாதானத்தின் கதவு திறக்கப்படுகின்ற போது மக்கள் அனைவரும் துன்பத்திலிருந்து முற்றாக விலகி சுபீட்சமான எதிர்கால வாழ்வில் தம்மை வாஞ்சையுடன் அர்ப்பணிப்பார்கள்.

மக்கள் அனைவரும் தாம் விரும்பிய இடங்களுக்கு எந்தவித கட்டுப்பாடுகளோ, தடைகளோ இன்றி பூரண சுதந்திரமாக மன நிறைவோடு செல்லுவதற்கு சமாதானத்தை தவிர வேறு எவற்றாலும் பெற்று விடமுடியாது.

பாடசாலைகளிலும் ஆசிரியர்கள் பிள்ளைகளின் துர்க்குணங்களை அகற்றி நற்குணத்தை பெருக்கி அவர்களை உத்தம பிரஜைகளாக்க வேண்டும். இவற்றின் மூலம் சமாதானத்தை நிலைநாட்டி சுபீட்சகரமான வாழ்க்கையை பெற்றிடுவோம்.

வி.அபிராமி, சு.சுபஹரி.
யா/மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை.
பருத்தித்துறை.

எழுதுங்கள் வாசகர்களே!

இந்த அஞ்சலி என்ற சஞ்சிகை உங்களை வளர்ப்பதற்காகவே பிரசவிக்கப்பட்டுள்ளது. எனவே உங்கள் ஆக்கங்களை தை 30 ஆந் திகதிக்கு முன்பதாக எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். உங்கள் சிந்தனையை ஒழுங்கமைத்து பேனாவுக்கு வேலை கொடுங்கள். உங்கள் பேனாவில் உள்ள ஒளி உங்கள் அக இருளையும், இவ் உலகின் இருளையும் அகற்றட்டும்.

ஆசிரியர்

## வாசகரின் உள்ளத்திலிருந்து.............




01) அஞ்சலி கண்டு அகமிக மகிழ்ந்தேன். அழகான அருமையான அர்த்தமுள்ள பெயர் "அஞ்சலி" இப்பிரதேசத்துக்கு கிடைத்த பெரும் வரப்பிரசாதம். எதிர்கால சந்ததியின் எழுத்தாற்றலை வளர்ப்பதற்கு "அஞ்சலி" களம் அமைத்து கொடுப்பதையிட்டு பெருமைப்படுவதோடு பாராட்ட வேண்டிய ஒன்றாகும்.

அஞ்சலி என்பது விரித்தேந்திய இரண்டு கைகளையும் பொருத்திக் கோலச்செய்த குழி, அந்தக்குழி கொண்ட மலர்களோ இறைவனால் விரும்பி ஏற்கப்படுவதாகும். ஆயினும் சில சமயம் அம்மலர் ஒரே இனமும் ஒரே மணமும் ஒரே வடிவமும் கொண்டதாகவும் இருக்கலாம். ஆனால் இந்த "அஞ்சலி" உள்ளடக்கும் மலர்களோ பல இனம் பல வடிவம் பல்வேறு மணம் கொண்டதாக அமைந்துள்ளது அனைவருக்கும் அளப்பரிய ஆனந்தமே. எனவே இம் மலர்கள் ஒவ்வொன்றையும் பற்றி விரித்துக் கூற இந்த இடம் போதாதென்பதால் ஒட்டுமொத்தமாக எல்லா மலர்களுமே கண்ணையும் மனதையும் கவரும் அழகிய றோசா மலர்கள் என்றால் மிகையாகாது.

அதேநேரம் சுடர்-02ல் சேர்க்கப்பட வேண்டிய ஒரு விடயத்தை சுட்டிக்காட்ட வேண்டிய கடப்பாடும் எனக்கு உண்டு. சுடர்02 பக்கம்01 ஆசிரியர் எழுதுகிறார் என்ற தலைப்பில், ஐப்பசி மாதத்தில் உலகளாவிய ரீதியில் முக்கியப்படுத்தப்பட்ட தினங்களில் 02 ஆந் திகதி சேர்க்கப்படவில்லை. அன்றைய தினம் உலகம் போற்றும் உத்தமராம் காந்தி பிறந்த தினம் அதுமட்டுமல்ல அத்தினம் ஐக்கிய நாட்டு ஸ்தாபனத்தால் அகில உலகிற்கும் உரிய அகிம்சை தினமாகப் பிரகடனப்படுத்தப்பட்டது யாவரும் அறிந்தது. இன்று முழு உலகத்திற்கும் தேவைப்படும் மிக உயர்ந்த பண்பு அகிம்சைதான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர். காலம் முழுக்க கடைப்பிடிக்க வேண்டி பண்பை நினைவு படுத்தும் அன்றைய தினத்தை "அஞ்சலி" மறந்து விட்டது சிறிது வேதனையாக உள்ளது.

இப்படி எழுதுவது குற்றம் கண்டு குறை கூறுவதற்காக அல்ல எல்லாவற்றையும் நன்றாக வாசிக்கின்றோம் என்பதை உணர்த்துவதற்காகவே என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி

ஆ.வடிவேலு

ஓய்வு பெற்ற அதிபர்.

02) அஞ்சலி அகத்துடன் அஞ்சலியக இளையோர் கழக வெளியீடான இளம் நெஞ்சங்களின் இளம் எழுத்தாளர்களின் எண்ணத்தில் உருவான அஞ்சலி சஞ்சிகை சுடர்-2 ஊடாக மீண்டும் இணைவதில் பெருமகிழ்வடைகிறேன். சற்றுமுன் என் கைகளில் கிடைத்த அஞ்சலி சுடர்-2 ஐ வாசித்த அந்த மகிழ்வுடனும், பெருமிதத்துடனும் இம்மடலை எழுதுகிறேன். இளைரோர் நெஞ்சத்தில் இலைமறைகாயாக மறைந்திருக்கும் அரிய படைப்பாற்றலை வெளிக்கொணர்ந்து, அவர் களின் எண்ணங்களை எழுத்துருவாக்கி அவர்களிடம் ஓர் நம்பிக்கை யையும், பலத்தையும், அங்கீகாரத்தையும், அந்தஸ்தையும் இந்த சஞ்சிகை வழங்கியிருக்கிறது என்பதில் எந்தவித ஐயமுமில்லை. அந்தவகையில் அமைந்திருந்ததுதான் தங்களுடைய "அஞ்சலிப் பூக்கள்" சிறுவர்கழக சிறுவர் தினநிகழ்வும். சின்னஞ் சிறார்களின் உள்ளக்கிடக்கையை உளசந்தோசத்தை உளஆற்றலை கலை நயத்துடன் வெளிப்படுத்த அரங்கமைத்து தந்திருந்தது. அறிந்திருந்தும் அந்த நிகழ்வை கண்டுமகிழ தவறியமையை நினைத்து மிகவும் வருந்துகிறேன். கிடைப்பவற்றில் மிகப்பெரிய சந்தோசம் பட்டாம்பூச்சிகளாய் பறந்து திரிந்து மழலைமொழி பேசும் அந்தச் சின்னஞ்சிறார்களின் குதூகலம். அனுபவிக்க கொடுத்து வைத்திருக்க வேண்டும். இதை நேரில் காண எவ்வளவோ முயன்ற போதும் கடை சித்தருணத்தில் சில காரணங்கள் தடுத்துவிட்டது. இருந்த போதும் நடந்த நிகழ்வுகளை அறிந்து மகிழ்ந்தேன்.

மேலும் வெளிவந்த இரண்டாவது "அஞ்சலி" சுடர்-2 சஞ்சிகையின் அனைத்து ஆக்கங்களும் மிக்வும் சிறப்பானதாக அமைந்துள்ளது. உள சமூக ஆன்மீக இலக்கிய பொது விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பது அன்றும் இன்றும் "அஞ்சலி" க்கு பெருமை சேர்த்துள்ளது. திரு.அ.பி.விஜயரத்தினம் ஆசிரியரின் "அகராதி ஓர் அறிமுகம்" அருட்சகோதரன் லேபோண்சுதனின் "உன்னையே நீ அறிய" உளவளத்துணையாளர் அருட்தந்தை டேமியனின் கருத்துரு வாக்கம் "பிள்ளைகளை வளர்ப்பது எப்படி?" கலைப்பீடமாணவிகளான உமாவின் "காலத்தின் அருமை" , டயானாவின் "வறுமை என்ன

வரம்பா?" எண்ணத்தொகுப்பு, ஆசிரியர் மதிவதனியின் "ஆங்கிலம் கற்போம்" இந்த ஆக்கங்கள் நான்படித்ததில் மிகவும் பிடித்தவை ஆகவும் மொத்தத்தில் அனைத்து ஆக்கங்களும் சிறந்தவையே. இவற்றுடன் கவித்தொகுப்புக்களில் மாணவி கிருஸ்ணப்பிரியாவின் "என்னைப்பெற்ற இருஜீவன்களுக்கும்', மனோதர்சினியின் "நம்பிக்கை யிருந்தால்---" மிகவும் பிடித்திருந்தது. இளையோர் மனதில் ஓர் நம்பிக்கையும் வைராக்கியத்தையும் தந்து வாழ்வின் அர்த்தத்தை புரிய வைத்துள்ளது. HNDA மாணவி சிவதர்சினியின் "வரமா? சாபமா?" என் மனதில் ஓர் சலனத்தை உண்டு பண்ணியது. "அவள் தவத்துக்கு நான் வரமா? சாபமா?---"இந்த வரிகள்!? எந்த தாய்க்கும் தன்பிள்ளை சுமையாகவோ சாபமாகவோ இருப்பது?--- மன்னிக்கவும் பல்வேறு ஆக்கங்களையும் தாங்கி வந்து புகழ் மணம் பரப்பும் "அஞ்சலி" சஞ்சிகை உருவாக்கத்தில் உழைத்த அனைவருக்கும் எனது மனமுவந்து பாராட்டுக்களை தெரிவிப்பதில் மனமகிழ்வடைகிறேன். மேலும் அஞ்சலி அகத்தின் உளவளத்துணைபயிற்சியின் மூலம் சிறந்த பல உளவளத்துணையாளர்கள் உருவாக்கத்திலும் தன்னை அர்ப்பணித்துள்ளவரும் தனக்கு கிடைத்த அரிய பொக்கிசமான அருட்தந்தை டேமியன் அவர்களின் உழைப்பில் உளசமூக அபிவிருத்தி செயற்பாடுகள் மூலம் சமூக மேம்பாட்டை கட்டி யெழுப்புவதிலும் சிறந்து விளங்குகின்றது பெருமைக்குரிய விடயம். யாழ்.குடாநாட்டில் வரலாற்றில் முதன்முதலாக தொடர்ச்சியாக வெளியாகிக்கொண்டிருக்கும் சஞ்சிகைகளில் சிறந்ததொன்றாக எமது சமூகத்திற்கு கிடைத்திருப்பது ஓர் வரப்பிரசாதமாகும். இந்த சிறி யோனின் கருத்துக்களையும் ஏற்று மதிப்பளித்த தங்கள் அனை வருக்கும் எனது நன்றிகளையும் பாராட்டுக்களையும் அர்ப்பணிப்பதோடு இந்த "அஞ்சலி" சஞ்சிகை தொடர்ந்து இன்னும் பல ஆக்கங்களையும் தாங்கி வெற்றியுடன் வெளிவர வாழ்த்தி தங்களிடமிருந்து விடை பெறுகிறேன்.

ஸ்ரீ.செந்தூரன்,
(உளசமுக உளவளத்துணை பயிலுநர்)
"விழி" உள சமூக மேம்பாட்டு அமையம்,
யாழ்ப்பாணம்

# தவமாய் தவமிருந்து

பள்ளியிலும் கல்லூரியிலும்
புறாவைப் போல்
சிறகடித்தவன்தான்
ஆனால்.............

சமுதாய வீதியில்
இப்போது
புழுவைப் போல்
நெளிந்து கொண்டிருக்கின்றான்

எப்போதும் உழைப்பதற்கு
தயாராயிருக்கும் அவனுக்கு
எங்கே உழைப்பது
என்பதுதான் தெரியவில்லை

வேலைக்குப் போய்க் கொண்டிருப்பவனுக்கு
சும்மா இருப்பதே சுகம்
வேலையில்லாமல் தவிப்பவனுக்கு
சும்மா இருப்பதே சோகம்

ஒரு தபால்காரனின் வருகைக்காக - அவன்
தவமாய் தவமிருக்கிறான்.

பா.மதனரூபி
மகாத்மா வீதி
அல்வாய் வடக்கு

# "ஓ" மானிடனே....!

"ஓ" மானிடனே கவனமாயிரு
நீ நாகரிகம் எனும் புதைக்குளிக்குள் மூழ்குவதை
சற்று சிந்தித்துப் பார்
போர்க்கால உலகில் நீ சம்பாதிக்கும்
பணமெல்லாம் நாகரிகத்திற்குள் விடுவதா?
மரணித்துப் போகும் எம் உடம்பிற்கு
இத்தனை அலங்காரமா?

நீ உழைப்பதில் கடுகளவையேனும்
அனாதைகளுக்காய் செவிடு
நீ நாகரிகமெனும் புதைகுழிக்குள் மூழ்காதிரு

K.Rathy
V.M Road,
Point Pedro.

<u>வாழ்த்துகின்றோம்.</u>

எமது தும்பளைக் கிராமத்தைச் சேர்ந்தவரும், யாழ் பல்கலைக்கழகத்தின் பௌதீகவியல் துறைத்தலைவருமான கலாநிதி.நாகலிங்கம் சிவயோகன் அவர்கள் **"இளம் விஞ்ஞானி"** விருதினைப் பெற்றதினையிட்டு அவரை வாழ்த்துவதில் "அஞ்சல"ி பெருமையடைகிறாள்.

# How to use a dictionary

An intelligent and effective use of dictionary is a sign of scholarship. It is worth of our while to know what specific purpose are served by a standed dictionary like a oxford dictionary. Firstly we get to know the correct spelling of a word. Secondly the correct pronunciation.
of it, which include both syllable and accentuation Tthirdly, whether the word is a single or a compound word. Fourthly the meaning of the word. Fifthly the different parts of speech of the same words with their respective pronunciation.

By these we can use a dictionary with a complete using .

By- Miss. Ahrani Pulendran
Grade 10
J/M.G.H.S.
Point Pedro.


**"A friend will be sure to act the part of an advocate before he assumes that of a judge.**

**(R.South)**

**No defeat final**
**until stop trying**




# மனமாற்றம்



அப்போதெல்லாம்
ஒத்தைப் பூக்களை கொய்துவிடுவேன்
இப்போது
அவ்வாறில்லை!
பூக்களை உடன்கட்டை ஏற்றுவதில்
உடன்பாடில்லை எனக்கு.
மலர்களின் இராச்சியத்தில்
குற்றவாளிக் கூண்டில்
முட்களின்மீது நின்று
காற்றைவைத்து வாதாட
தைரியமில்லை.

க.சுதர்சன்,
தும்பளை.

## நாளைய தலைவர்கள் நாங்களே!



பகலிலே பறந்து திரியிறம்
கண்ணிருந்தும் பார்வையில்லையே
வீதியிலே அலைந்து திரியிறம்
வாயிருந்தும் பேசமுடியல – பச்சைக் குழந்தைகள் நாம்

சிறுவர்களே! நீங்கள் நாளைய தலைவர்கள்
இதைக் கேட்கத் துடிக்கிதே எம் நெஞ்சம்
பட்டினியாய்த் திரியிறம் படிக்க வழியில்ல
பாதிவயிற்றோட பள்ளிக்கூடம் போறம்
கேள்வியானதே எங்கள் நாளைய கனவு

ஆனந்த மொழிகள் பலபேசி – எம்மை
அன்னையவள் வழியனுப்ப – அன்று
ஆர்வமுடன் பள்ளிசென்ற நாட்கள், எத்தனை எத்தனை
அந்தப் பசுமையான நாட்களைத் தொலைத்துவிட்டு
இன்று அமைதியைத் தேடுகிறோம், நாளைய தலைவர்கள் நாம்

இன்று பள்ளிசெல்லும் வீதியிலே
இறந்த மனித உடலங்கள்
பாடசாலை நேரத்திலோ பயங்கர வெடியோசை
சிதைந்தது எம் இலட்சியம்
தேடிடும் எம் நாளைய கனவுகள் எங்கே? இந்த
பிஞ்சு உள்ளங்களை யாரும் நினையாரோ

கொடிய யுத்தமே! எம்மை விட்டு அகன்றுவிடு
நாம் சமாதானத் தென்றலில் அக்களிக்க வழிவிடு
எம்மை நிம்மதியாகப் படிக்கவிடு – ஏனெனில்
நாளைய தலைவர்கள் நாங்களே!

இ.விமல்ராஜ்
புனித வளனார் அ.ம.தி குருமடம்
கொழும்புத்துறை

ஜெஸ்வின் அன்ட் பருத்தித்துறைப் பங்கு கணினிப் பயிற்சியகம்
பங்குப்பணிமனை - புனித தோமையார் ஆலயம்
பருத்தித்துறை.

கிராமிய மட்டத்தில் பயிற்றுவிக்கும் திட்டத்தின்கீழ் திட்ட அடிப்படையில் இலவசக் கணினிப் பயிற்சி நெறி

கிராமிய மட்டத்தின்கீழ் பயிற்றுவிக்கும் திட்டத்தில் மேற்படி எமது பயிற்சியகத்தினால் திட்ட அடிப்படையில் இலவசக் கணினிப் பயிற்சி நெறிகள் ஆரம்பம்

கிராம மட்டத்தில் அனைவரும் தகவல் தொழில்நுட்பத்தில் அனைத்து துறைகளிலும் நிறைவுள்ளவர்களாக வளர இத்திட்டம் வழிவகுக்கும். படித்தவர்கள், படியாதவர்கள் என்ற பாகுபாடின்றி அனைவரும் தகுதிக்கேற்ப பாடநெறிகளை தெரிவுசெய்து பயிற்சிநெறிகளை மேற் கொள்ளலாம்.

பயிற்சி நெறிகள்

01) விவசாயத்துறையினை மேற்கொள்வதற்கான பயிற்சி நெறி
02) மீன்பிடித்துறையினை மேற்கொள்வதற்கான பயிற்சி நெறி
03) தொழில் வசதியினை மேற்கொள்வதற்கான கணினிப்பயிற்சி
04) வங்கி நடைமுறைக்கணக்கினை மேற்கொள்வதற்கான பயிற்சி
05) அலுவலக தேவைக்கான கற்கைநெறி
06) ஓவியக்கலை கற்கைநெறி
07) படவரைஞர் பயிற்சி நெறி
08) சிறுவர் கணினிக் கற்கைநெறி
09) ரி.வி. டெக் திருத்துதல்
10) தட்டச்சு – சுருக்கெழுத்து (தமிழ்)

பயிற்சிதிட்டம் மேற்கொள்வதற்கான முறைகள்

01) கிராம சேவகர், சமுர்த்தி பிரிவு உத்தியோகத்தர் உறுதிப்படுத்தல் கடிதம் இருத்தல் வேண்டும்.
02) நிரந்தர வருமானம் பெறுவோரும் இப்பயிற்சி திட்டத்தில் பயன்பெறலாம்.
03) ஏற்கனவே எமது பயிற்சியகத்தில் பயிற்சி பெற்று வேறு பாடத்திட்டத்தை மேற்கொள்வதாயின் பயிறசியக நிர்வாகியின் கடிதம்.
04) அல்லது க.பொ.த சாதாரணதரத்தில் சித்தியெய்தியிருப் பின், அதற்கான சான்றிதழ் சமர்ப்பித்தல் வேண்டும்.

இதற்கான விண்ணப்பங்களினை பயிற்சியக அலுவலகத்தில் பெற்று 01-01-2008 இற்கு முன் ஒப்படைத்தல் வேண்டும்.

PUBLIC LIBRARY
JAFFNA

இளம் எழுத்தாளர்களுக்கு களம் அமைத்துக் கொடுப்பதில்
"அஞ்சலி" அளப்பரிய ஆனந்தமடைகிறாள்.

"இளையோரே! பெரியோரே!
திரளுங்கள் ஒன்றாக
பேனாமுனை கொண்டு இப் பேருலகை வெல்வோம்"

"அஞ்சலி"
அஞ்சலியகம்,
நெல்லண்டை,
தும்பளை,
பருத்தித்துறை,
யாழ்ப்பாணம்-இலங்கை.

"Anjali"
Anjali Aham,
Nellandai,
Thumpalai,
Point-Pedro,
Jaffna-Srilanka.

E.Mail: anjaliyouth@yahoo.com

எனக்கு சிற்பம் தெரியாது சித்திரம் வராது
சங்கீதம் முடியாது - ஆனால்
உளி, தூரிகை, வயலின்
அத்தனை வேலைகளையும் என் பேனா செய்யும்.

-வைரமுத்து-